<u>அசல் வழக்கு எண். 125/2019</u>

20.11.2025

**பெயர் – வெள்ளைச்சாமி** (DW–1)

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

(1) வாதி திலகவதி தனக்கு மேல்புற சுவற்றில் பூசுவதற்கு உரிமை உள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். திலகவதி சொத்திற்கு வடபுறம் எனக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது. வாதி மற்றும் எனது சொத்துக்கள் ஆதியில் அன்பானந்தம் மற்றும் அஞ்சுகம் என்பவர்களுக்கு பாத்தியப்பட்டிருந்தது. நான் 2000ம் ஆண்டு ஜுன் மாதம் கிரையம் பெற்றேன். அதே ஆண்டு நவம்பர் மாதம் வாதி கிரையம் பெற்றார். தாவாச் சொத்திற்கு தெற்கு, வடக்கு மற்றும் மேற்கு புறங்களில் சுற்றுச் சுவர் உள்ளது.

(2) திலகவதி சொத்திற்கு மேற்கே எனக்கு பாத்தியப்பட்ட வீடு உள்ளது. எனக்கு முன்பு அந்த சொத்து முத்துச்சாமி கவுண்டருக்கு தென்னை தோப்பாக தாவாச் சொத்திற்கு மேற்கும், தெற்கும் இருந்தது. தாவாச் சொத்திற்கு மேல்புறம் உள்ள வீட்டை பிரபாகரன் என்பவர் வீட்டு மனைகளாக பிரித்து விற்றார். மனை எண். 11 யை ஜாகீர் உசைன் என்பவரிடமிருந்து 2009ம் ஆண்டு வாங்கினேன். 2004ம் ஆண்டு வீட்டு மனைகளாக பிரித்தார்கள். 2013ம் ஆண்டு அந்த இடத்தில் வீடு கட்டினேன். எப்போது சுற்றுச் சுவர் கட்டினேன் என்றால் வீட்டிற்கு வடபுறம் கிழமேல் சுவரும் திலகவதி இடத்திற்கு தெற்கே எனது சொத்திற்கு கிழக்கே தென்வடல் சுவர் 2014 ம் ஆண்டு கட்டினேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு கட்டினேன் என்றால் சரிதான்.

(3) தாவாச் சொத்தின் தென்வடல் சுற்றுச் சுவரை ஒட்டி நான் கிழமேல் சுவர் கட்டினேன் என்றால் சரிதான். தென்வடல் சுவற்றில் எனது கிழமேல் சுவற்றை முட்டி கட்டியுள்ளேன். அந்த தென்வடல் சுவர் வாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் பொதுச் சுவர். தென்வடல் சுவர் நான் வீடு கட்டுவதற்கு முன்பே இருந்தது சுமார் 60 வருடங்களாக உள்ளது. தென்வடல் சுவர் பொதுச் சுவர் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த சுவர் பொது சுவர் என்று எந்த ஆவணத்திலும் கண்டு எழுதப்படவில்லை. நான் பொது சுவர் என்று குறிப்பிடும் சுவற்றின் நீளம் தென்வடல் 55 அடி, உயரம் 8 அடி. தென்வடல் சுவற்றின் வடபுறம் ஒரு கேட் உள்ளது என்றால் சரியல்ல முழுவதும் சுவராகத்தான் உள்ளது.

(4) நீதிமன்ற ஆணையர் தாவாச் சொத்தை பார்வையிட்டு அளந்த போது நான் உடன் இருந்தேன். ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபணை எதுவும் தெரிவிக்கவில்லை. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் மற்றும் அளவையர் வரைபடத்தில் தென்வடல் சுவர் வாதிக்கு பாத்தியப்பட்ட இடத்தில் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளது என்றால் அதைப் பற்றி தெரியாது. ஆணையர் அறிக்கை விவரங்கள் எனக்கு தெரியும் என்றும் ஆக்கிரமிப்பு செய்தது உறுதியானதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அறிக்கையில் தென்வடல் சுவற்றிற்கு மேற்கு புறம் தெற்கு எல்லையில் 1 ½ அடி அகலம் வடக்கு எல்லையில் 1 ¼ அடி அகலம் இடம் வாதிக்கு பாத்தியப்பட்ட இடத்தில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதைப் பற்றி தெரியாது.

(5) பி.வா.சா.ஆ.4 ஆவணம் எனது பேரன் ரமேஷ் பெயரில் நான் காப்பாளராக இருந்து நான் கிரையம் பெற்றேன். மனை எண் 11 யை கிரையம் பெற்றேன். தாவாச் சுவற்றிக்கு மேற்கே உள்ள வீடு உள்ள மனை. கிரைய ஆவணத்தில் உள்ள சரத்துக்கள் எனக்கு தெரியும். படித்து பார்த்த பின்பு தான் பதிவு செய்யப்பட்டது. ஆவண செக்கு பந்தியில் செல்லமுத்து காம்பவுண்ட் சுவற்றிக்கும், பாய் வீடு வகையறாவிற்கும் மேற்கு என்று தான் உள்ளது என்றால் சரிதான். செல்லமுத்து என்பவர் வாதி திலகவதியின் கணவர் என்றால் சரிதான். தென்வடல் சுவர் செல்லமுத்துவிற்கு பாத்தியப்பட்டது என்பதால் தான் அதை குறிப்பிட்டு கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு முன் பாத்தியஸ்தர் ஜாகீர் உசைன் கிரையம் பெற்ற செக்கு பந்தியை நானும் குறிப்பிட்டு கிரையம் பெற்றேன். நான் கிரையம் பெற்ற பின்பு தான் தென்வடல் சுவர் பொது சுவர் என்று எனக்கு தெரியும். நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் தென்வடல் சுவற்றில் வடபுறத்தில் கேட் வைத்து நுழைவாயில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நுழைவாயில் இல்லை சுவற்றை இடித்து திலகவதி கேட் வைத்தார். காவல் நிலையத்தில் புகார் கொடுத்து கேட் எடுத்து சுவர் வைக்கப்பட்டது. எந்த தேதியில் புகார் கொடுத்தேன் என்று ஞாபகம் இல்லை. 2016 அல்லது 2017ம் ஆண்டு இருக்கும். புகார் கொடுத்தது சம்மந்தமான ஆவணங்கள் எதுவும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை. நான் சொல்வது

போல எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(6) வாதி தென்வடல் சுவற்றில் வடபுறம் உள்ள நுழைவாயில் வழியாகத்தான் வந்து பூசி வருகிறார் என்றும் நான் தான் ஆட்சேபணை தெரிவித்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் தென்வடல் சுவர் வாதியின் கணவருக்கு பாத்தியப்பட்டது என்று தான் எழுதியுள்ளேன் என்றும் தென்வடல் சுவற்றில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தென்வடல் சுவற்றிற்கு மேற்கு புறம் உள்ள அவருக்கு பாத்தியப்பட்ட இடத்தின் வழியாகத்தான் வாதி சுவற்றை பூசி வருகிறார் என்றால் சரியல்ல. வாதிக்கு பாத்தியப்பட்ட சுவற்றிற்கு மேற்கே உள்ள இடத்தை ஆக்கிரமித்து நான் சுவற்றை கட்டி உள்ளதால் அதை அகற்ற வேண்டும் என்றால் சரியல்ல எனது மனை எண் 11ன் வடகிழக்கு எல்லைக் கல் வாதி சுவற்றிற்கு உள்ளே உள்ளது. வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றும் வாதியின் வழக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2025.11.20 19:47:42 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்